+2

No. of Printed Pages : 23

1262441 **7718**

பதிவு எண்
Register Number | M | A | R | – | 1 | 8 |

# PART - III

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

Time Allowed : 3 Hours ] [Maximum Marks : 200

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - அ / PART - A

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **30x1=30**

**Note :** Answer **all** the questions.

**I.** **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
**Fill in the blanks.**

**1.** முன்கூட்டிச் செலுத்திய செலவுக்ள் இருப்பு நிலைக் குறிப்பின் _________ பக்கத்தில் தோன்றும்.

Prepaid expenses are shown on the _________ side of the balance sheet.

**2.** முதல் மீது வட்டி _________ கணக்கில் பற்று வைக்கப்படும்.

Interest on capital is debited in _________ account.

[ திருப்புக / Turn over

3. 31.3.2012 அன்றைய இருப்பாய்வின்படி எடுப்புகள் ₹ 50,000 ஆண்டுக்கு 5% வீதம் எடுப்பு மீது வட்டி ₹ ________.

The Trial Balance as on 31.3.2012 shows drawings of ₹ 50,000. Interest on drawings at the rate of 5% per annum is ________.

4. ஒரு நிலை அறிக்கை ________ போன்று தோற்றமளிக்கும்.

A statement of affairs resembles a ________.

5. ________ கணக்கு, இருப்பு கட்டும் தொகையாக கடன் விற்பனையை அறிவதற்கு உதவுகிறது.

Credit sales can be ascertained as the balancing figure in the ________ account.

6. ஒவ்வொரு ஆண்டும், சொத்தின் ஏட்டு மதிப்பின் மீது தேய்மானம் கணக்கிடும் முறை ________ முறை என அழைக்கப்படும்.

Under ________ method, depreciation is calculated on the book value of the asset each year.

7. ஒரு நிலை சொத்தின் விற்பனை விலை ₹ 1,10,000 விற்பனை செய்த நேரத்தில் அதன் ஏட்டு மதிப்பு ₹ 80,000. விற்றதில் கிடைத்த இலாபம் ₹ ________.

Selling price of fixed asset ₹ 1,10,000. The book value of the asset at the time of sale ₹ 80,000. Profit on sale is ₹ ________.

8. வங்கி மேல்வரைப்பற்று ________ பொறுப்புக்கு ஒரு உதாரணமாகும்.

Bank overdraft is an example of ________ liability.

9. மொத்த விற்பனை ₹ 2,00,000 ஆக உள்ளபோது ரொக்க விற்பனை ₹ 65,000 எனில், கடன் விற்பனை ₹ ________ ஆகும்.

When total sale is ₹ 2,00,000, cash sales is ₹ 65,000, then credit sales will be ₹ ________.

10. ஏப்ரல் மாத தொடக்க இருப்பு ₹ 1,250. அம்மாதத்தில் மொத்த ரொக்கப் பெறுதல்கள் ₹ 4,300 மற்றும் மொத்த செலுத்தல்கள் ₹ 3,750 எனில், மே மாத தொடக்க இருப்பு ________ ஆகும்.

The opening balance of cash in April is ₹ 1,250. Total receipts for the month are ₹ 4,300 and total payments amounted to ₹ 3,750. Opening balance of cash in May will be ________.

11. கூட்டாண்மையின் மிக முக்கிய சிறப்பியல்பு பரஸ்பர ________ முகமை ஆகும்.

Mutual and ________ agency is the essence of a partnership.

12. பதிவுறா பொறுப்பை ஏடுகளில் கொணர்வது, ________ இனமாகும்.

When an unrecorded liabilities is brought into books, it results in ________.

13. ஒரு சொத்தின் மதிப்பு அதிகரிக்கும் பொழுது, அது ________ இனமாகும்.

When the value of an asset increases, it results in ________.

14. ஒரு நிறுமத்தின், குறும ஒப்பமாக வெளியிடப்பட்ட முதலில் ________ பெற்றிருக்க வேண்டும்.

Minimum subscription that should be received by the company is ________ % of the issued capital.

15. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீட்டு விலை முகமதிப்பைவிட ________ இருக்க வேண்டும்.

Forfeited shares have to be reissued at a price ________ than the face value.

II. கொடுக்கப்பட்ட **மூன்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

Choose the most suitable answer from the given **three** alternatives and write the option code and the corresponding answer.

16. இறுதிச் சரக்கிருப்பு தோன்றுவது :

(அ) வியாபாரக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பில்

(ஆ) ரொக்கக் கணக்கு

(இ) இலாப - நட்டக் கணக்கில்

Closing stock is shown in :

(a) Trading account and balance sheet

(b) Cash Account

(c) Profit and loss account

17. 31.3.2015 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹ 2,06,000. வாராக்கடன் ₹ 6,000 போக்கெழுத வேண்டும். மேலும் 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ₹ ________ ஆகும்.

(அ) ₹ 10,500 (ஆ) ₹ 10,300 (இ) ₹ 10,000

The Trial Balance as on 31.3.2015 shows Sundry Debtors ₹ 2,06,000. Write off bad debts of ₹ 6,000. Provide 5% for bad and doubtful debts. The amount of provision for bad and doubtful debts is :

(a) ₹ 10,500 (b) ₹ 10,300 (c) ₹ 10,000

18. ஒற்றைப்பதிவு முறை ஒரு :

(அ) முழுமை பெறாத இரட்டைப்பதிவு முறை

(ஆ) துல்லியமான முறை

(இ) விஞ்ஞான அடிப்படையிலான முறை

Single entry system is :

(a) an incomplete double entry system

(b) accurate system

(c) a scientific method

19. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்தச் சொத்துக்கள் ₹ 5,00,000; அவருடைய பொறுப்புகள் ₹ 3,50,000; அவருடைய முதல் ________ ஆகும்.

(அ) ₹ 8,50,000 (ஆ) ₹ 2,10,000 (இ) ₹ 1,50,000

The total assets of a proprietor are ₹ 5,00,000. His liabilities ₹ 3,50,000. Then his capital in the business is ________.

(a) ₹ 8,50,000 (b) ₹ 2,10,000 (c) ₹ 1,50,000

20. நிலைச் சொத்தை விற்பதால் ஏற்படும் நட்டம் தோன்றுவது :

(அ) நிலைச் சொத்துக் கணக்கின் பற்றுப் பக்கம்

(ஆ) நிலைச் சொத்துக் கணக்கின் வரவுப் பக்கம்

(இ) தேய்மானம் கணக்கின் வரவுப் பக்கம்

Loss on sale of fixed asset appear on the :

(a) debit side of fixed asset account

(b) credit side of fixed asset account

(c) credit side of depreciation account

21. ₹ 10,000 மீது ஆண்டுக்கு 10% குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால், முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும். தேய்மானத் தொகையின் மொத்தம் :

(அ) ₹ 2,710 (ஆ) ₹ 2,701 (இ) ₹ 2,107

Total amount of depreciation provided on the written down value method at the rate of 10% p.a. on ₹ 10,000 for first three years will be :

(a) ₹ 2,710 (b) ₹ 2,701 (c) ₹ 2,107

22. மொத்த விற்பனை ₹ 3,40,000, கிடைத்த மொத்த இலாபம் ₹ 1,40,000 விற்ற பொருளின் அடக்க விலை __________ ஆகும்.

(அ) ₹ 4,80,000 (ஆ) ₹ 3,40,000 (இ) ₹ 2,00,000

Total sales is ₹ 3,40,000 and the gross profit made is ₹ 1,40,000. The cost of goods sold will be __________.

(a) ₹ 4,80,000 (b) ₹ 3,40,000 (c) ₹ 2,00,000

23. இயக்க விகிதம் =

(அ) 100 + இயக்க இலாப விகிதம்

(ஆ) இயக்க இலாப விகிதம்

(இ) 100 – இயக்க இலாப விகிதம்

Operating ratio is equal to :

(a) 100 + Operating profit ratio

(b) Operating profit ratio

(c) 100 – Operating profit ratio

24. அறைகலன் விற்றது __________ க்கு எடுத்துக்காட்டாகும்.

(அ) ரொக்க செலுத்தல்கள்

(ஆ) கடன் செலுத்தல்கள்

(இ) ரொக்கப் பெறுதல்கள்

Sale of furniture is an example for :

(a) Cash payments

(b) Credit payments

(c) Cash receipts

25. நிலை முதல் முறையில், கூட்டாளிக்குக் கொடுக்கப்படும் கழிவு பதியப்படுவது :

(அ) முதல் கணக்கில்

(ஆ) நடப்புக் கணக்கு அல்லது முதல் கணக்கில்

(இ) நடப்புக் கணக்கில்

Under fixed capital method commission payable to a partner is recorded :

(a) in capital account

(b) either in current account or capital account

(c) in current account

26. புதிய கூட்டாளி சேர்க்கையில், பொதுக்காப்புக் கணக்கில் உள்ள இருப்பு மாற்றப்படுவது :

(அ) பழைய இலாபப் பகிர்வு விகிதத்தில் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகள்

(ஆ) புதிய இலாப விகிதத்தில் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகள்

(இ) புதிய இலாபப் பகிர்வு விகிதத்தில் அனைத்துக் கூட்டாளிகளின் முதல் கணக்குகள்

On admission of a new partner balance of General Reserve Account should be transferred to the capital account of :

(a) Old partners in their old profit sharing ratio

(b) Old partners in their new profit sharing ratio

(c) All partners in their new profit sharing ratio

27. கூட்டாளி விலகலின் பொழுது ________ கணக்கிடப்படுகிறது.

(அ) முதல் விகிதம்

(ஆ) தியாக விகிதம்

(இ) ஆதாய விகிதம்

________ is calculated at the time of retirement of a partner.

(a) Capital ratio

(b) Sacrificing ratio

(c) Gaining ratio

28. நிறுமமானது பங்குகளை :

(அ) முகமதிப்பு மற்றும் முனைமத்தில் வெளியிடலாம்

(ஆ) முகமதிப்பு, முனைமம் மற்றும் தள்ளுபடியில் வெளியிடலாம்

(இ) முகமதிப்பில் மட்டும் வெளியிடலாம்

A company can issue shares :

(a) at par and at premium

(b) at par, at premium and at discount

(c) at par only

29. பொதுவாக நிறுமங்கள் பங்குகளை ________ தள்ளுபடியில் வெளியிடலாம்.

(அ) 10% (ஆ) 20% (இ) 5%

Normally companies can issue shares at ________ of discount.

(a) 10% (b) 20% (c) 5%

30. வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டால் அதனை ________ என்று அழைக்கலாம்.

(அ) குறை ஒப்பம் (ஆ) முழு ஒப்பம் (இ) மிகை ஒப்பம்

When more number of applications are received than that are offered to the public, it is called ________.

(a) Under subscription (b) Full subscription (c) Over subscription

## பகுதி - ஆ / PART - B

குறிப்பு : (i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 10x5=50

(ii) கருத்தியல் சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Note : (i) Answer **any ten** questions.

(ii) Answer to theory questions should not exceed **50** words each.

31. வாராக் கடன் என்றால் என்ன ?

What is bad debt ?

32. நிகர மதிப்பு முறை என்றால் என்ன ?

What is networth method ?

33. தேய்மானத்திற்கு வரைவிலக்கணம் தருக.

Define depreciation.

34. முதல் விற்பனை விகிதம் பற்றி குறிப்பு வரைக.

Write notes on capital turnover ratio.

35. ரொக்கச் செலுத்தல்களுக்கு 5 உதாரணங்கள் தருக.

Give any five examples for cash payments.

36. எடுப்பு என்றால் என்ன ?

What is Drawings ?

37. விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு என்றால் என்ன ?

What is prorata allotment ?

38. 31.3.2004 -ஆம் நாளைய இருப்பாய்வின்படி அறைகலன் மதிப்பு ₹ 60,000 சரிக்கட்டுதல் : அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். இதற்கான சரிக்கட்டு பதிவு மற்றும் மாற்று பதிவு தருக.

The Trial balance shows the value of furniture on 31.3.2004 as ₹ 60,000. Adjustment : Furniture is to be depreciated at 10%. Pass adjusting and transfer entry.

39. விடுபட்ட தகவலைக் காண்க.

| | |
|---|---|
| இறுதி முதல் | ₹ 1,63,800 |
| கூடுதல் முதல் | ₹ 42,300 |
| எடுப்பு | ₹ 25,200 |
| நட்டம் | ₹ 12,600 |

Calculate the missing information.

| | |
|---|---|
| Closing Capital | ₹ 1,63,800 |
| Additional Capital | ₹ 42,300 |
| Drawings | ₹ 25,200 |
| Loss | ₹ 12,600 |

40. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு, நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக.

| | |
|---|---|
| நிலைச் சொத்தின் அடக்க விலை | ₹ 50,000 |
| எறிமதிப்பு | ₹ 5,000 |
| பயனளிப்புக் காலம் | 10 ஆண்டுகள் |

From the following particulars, find out the rate of depreciation, under straight line method.

| | |
|---|---|
| Cost of Fixed asset | ₹ 50,000 |
| Residual value | ₹ 5,000 |
| Estimated life | 10 years |

41. பின்வரும் விவரங்களைக் கொண்டு புற, அகப்பொறுப்புகள் விகிதத்தைக் கணக்கிடுக.

| | ₹ |
|---|---|
| கடனீட்டுப் பத்திரம் | 2,00,000 |
| வங்கிக் கடன் | 1,00,000 |
| சாதாரண பங்கு முதல் | 1,25,000 |
| காப்புகள் | 25,000 |

Calculate Debt Equity ratio from the following information.

| | ₹ |
|---|---|
| Debentures | 2,00,000 |
| Loan from bank | 1,00,000 |
| Equity share capital | 1,25,000 |
| Reserves | 25,000 |

42. அமலா, கமலா என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். விமலா என்பவரை இலாபத்தில் $\frac{1}{5}$ என்ற பங்கில் கூட்டுக்குச் சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுக.

Amala and Kamala are the partners sharing profits in the ratio of 3 : 2. They admit Vimala for $\frac{1}{5}^{th}$ share in profits of the business. Calculate new profit sharing ratio.

43. ஹரீஷ் மற்றும் சுதர்ஷன் ஆகிய இரு கூட்டாளிகளின் சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். ஹரீஷ் ஒவ்வொரு மாத இறுதியிலும் ₹ 400 தொடர்ந்து எடுத்துக் கொள்கிறார். சுதர்ஷன் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் ₹ 800 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீதான வட்டி ஓர் ஆண்டிற்கு 5% என கணக்கிடுக.

Harish and Sudharshan are two partners sharing profits and losses equally. Harish drew regularly ₹ 400 at the end of every month during the year. Sudharshan drew ₹ 800 regularly at the beginning of every month during the year. Calculate interest on their drawings at 5% p.a.

44. அரவிந்த் வரையறு நிறுமம் பங்கு ஒன்று ₹ 10 வீதம் 20,000 பங்குகளை ₹ 2 முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவு தருக.

Arvind Ltd. issued 20,000 shares of ₹ 10 each at a premium of ₹ 2 per share. Pass Journal entry.

## பகுதி - இ / PART - C

குறிப்பு : (i) **ஏதேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். இவற்றுள் 45- வது வினாவிற்கு **கட்டாயம்** விடையளிக்க வேண்டும். **5x12=60**

(ii) கருத்தியல் சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **any five** questions including question number **45** which is **compulsory**.

(ii) Answer to theory questions should not exceed **150** words each.

45. (அ) 31.3.2002 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹ 1,25,000.

**சரிக்கட்டுதல்கள் :**

1. ₹ 5,000 வாராக்கடன் போக்கெழுதுக
2. பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
3. கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

**அல்லது**

(ஆ) ஒற்றைப் பதிவு முறையில் கணக்கேடுகளைப் பராமரித்து வரும் திரு. பரணீதரனின் இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன :

| | 2000 ஏப்ரல் 1 | 2001 மார்ச் 31 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| அறைகலன் | 2,000 | 2,000 |
| சரக்கிருப்பு | 5,000 | 6,000 |
| பற்பல கடனாளிகள் | 6,000 | 4,000 |
| ரொக்கம் | 10,000 | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 2,000 | 3,500 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 1,000 | 500 |
| கடன் (ப) | - | 1,000 |
| முதலீடுகள் | - | 4,000 |

அவ்வாண்டில் அவரது எடுப்பு ₹ 2,000. அறைகலன் மீது 10% தேய்மானம் அனுமதிக்க. பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக. 31.3.2001 -ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

(a) The Trial Balance shows on 31.3.2002, Sundry debtors ₹ 1,25,000.

**Adjustment :**

1. Bad debts to be written off ₹ 5,000.
2. Provide @ 5% provision for bad and doubtful debts and
3. Provide @ 2% provision for discount on debtors.

Pass entries and show how these items will appear in the final accounts.

**OR**

(b) The Balances appear in Bharanidharan's books which are kept on single entry basis.

| | 1st April 2000 ₹ | 31st March 2001 ₹ |
|---|---|---|
| Furniture | 2,000 | 2,000 |
| Stock | 5,000 | 6,000 |
| Sundry Debtors | 6,000 | 4,000 |
| Cash | 10,000 | 20,000 |
| Sundry Creditors | 2,000 | 3,500 |
| Bills Receivable | 1,000 | 500 |
| Loan (Dr.) | - | 1,000 |
| Investment | - | 4,000 |

His drawings during the year were ₹ 2,000. Depreciate furniture by 10% and provide a reserve for bad and doubtful debts at 5% on sundry debtors. Ascertain profit or loss for the year ended 31.3.2001.

46. தேய்மானத் தொகையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ?

What are the factors determining the amount of depreciation ?

47. ரொக்கத் திட்டப் பட்டியல் தயாரிக்க பயன்படுத்தும் முறைகளை வரிசைப்படுத்துக. ரொக்கத் திட்டப் பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகளை விளக்குக.

List the methods that can be used for the preparation of the cash budget. Enumerate the steps in the preparation of cash budget.

48. நற்பெயரைப் பாதிக்கும் காரணிகள் யாவை ?

What are the factors affecting goodwill ?

49. சுதா அன்ட் கோ ₹ 64,000 மதிப்புள்ள இயந்திரத்தை 01.04.2012 அன்று வாங்கியது. அதை பழுது பார்த்து நிறுவுவதற்கான செலவுகள் ₹ 16,000. ஆண்டுதோறும் 10% வீதம் நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. 31.03.2015 அன்று இயந்திரம் பயனற்றுப்போனதால் ₹ 52,000 -க்கு விற்கப்பட்டது. கணக்கேடுகள் ஆண்டுதோறும் மார்ச் 31 அன்று முடிக்கப் பெறுகின்றன. இயந்திரக் கணக்கையும், தேய்மானக் கணக்கையும் மூன்று ஆண்டுகளுக்குத் தயார் செய்க.

Sudha and Co., purchased a Machinery for ₹ 64,000 on 01.04.2012. They spent ₹ 16,000 on the repairs and installed the same. Depreciation is written off at 10% p.a. on the straight line method. On 31.03.2015 the machinery was found to be unsuitable and sold for ₹ 52,000. Assume that the accounts are closed on 31st March every year. Prepare Machinery account and Depreciation account for three years.

50. பின்வரும் விவரங்களைக் கொண்டு நடப்பு விகிதம் நீர்மை விகிதம் மற்றும் துல்லிய நீர்மை விகிதம் கணக்கிடுக.

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| ரொக்கம் | 4,000 | கடனீந்தோர் | 34,000 |
| குறுகிய கால முதலீடுகள் | 10,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 26,000 |
| வங்கி | 16,000 | வங்கி மேல் வரைப் பற்று | 30,000 |
| கடனாளிகள் | 38,000 | | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 22,000 | | |
| சரக்கிருப்பு | 45,000 | | |

From the following calculate Current ratio, Liquid ratio and Absolute liquid ratio.

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| Cash | 4,000 | Creditors | 34,000 |
| Short Term Investments | 10,000 | Bills Payable | 26,000 |
| Bank | 16,000 | Bank overdraft | 30,000 |
| Debtors | 38,000 | | |
| Bills Receivable | 22,000 | | |
| Stock | 45,000 | | |

51. அமுதன், இராமன் எனும் கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். 1.4.2003 அன்றைய அவர்களுடைய முதல் முறையே ₹ 1,60,000, ₹ 1,20,000 ஆகும். கூட்டாண்மை ஒப்பாவணம் கீழ்க்காண்பனவற்றிற்கு வகை செய்கிறது. சரிக்கட்டுதல்களுக்கு முன் 2004 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ₹ 60,000. அந்த ஆண்டின் எடுப்புகள் முறையே அமுதன் ₹ 12,000 இராமன் ₹ 8,000 ஆகும்.

1. முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5%
2. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% (அமுதன் ₹ 360 இராமன் ₹ 240 )
3. அமுதன், இராமன் இருவரும் முறையே ஆண்டுக்கு ₹ 10,000 ஊதியம் பெறுகின்றனர்

இலாப நட்ட பகிர்வு கணக்கையும், கூட்டாளிகளின் முதல் கணக்கையும் தயார் செய்க.

Amuthan and Raman are partners in a firm sharing profits and losses in the ratio 3 : 2. Their capitals on 1.4.2003 were ₹ 1,60,000 and ₹ 1,20,000 respectively. The Net profit of the firm for the year ended 31st March 2004 before making adjustments for the above items was ₹ 60,000. Drawings of the partners during the year were, Amuthan ₹ 12,000 and Raman ₹ 8,000. Their partnership deed provided for the following :

1. Interest on capital at 5% p.a.
2. Interest on Drawings at 6% p.a. (Amuthan ₹ 360 Raman ₹ 240)
3. Amuthan and Raman to get a salary of ₹ 10,000 each per annum.

Show the profit and loss appropriation account and capital accounts of the partners.

52. X நிறுமத்தின் இயக்குநர்கள் ₹ 10 மதிப்புடைய 5,000 சாதாரண பங்குகள் மீது இறுதி அழைப்புத் தொகை ₹ 2 செலுத்தாத காரணத்தால் ஒறுப்பிழப்பு செய்தனர். இப்பங்குகள் ₹ 35,000 -க்கு மறு வெளியீடு செய்யப்பட்டன.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் முதலான காப்பிற்கான பேரேட்டுக் கணக்குகளை தயார் செய்க.

The Directors of X Ltd. forfeited 5,000 equity shares of ₹ 10 each fully called up on which final call of ₹ 2 has not been paid. These shares were re-issued for ₹ 35,000. Give journal entries and prepare Shares Forfeiture A/c and Capital Reserve A/c.

www.Padasalai.Net

## பகுதி - ஈ / PART - D

**குறிப்பு :** ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்க. 53 -**வது** வினாவுக்கு **கட்டாயம்** விடையளிக்க வேண்டும். 3x20=60

**Note :** Answer **any 3** questions including Q. no. **53** which is **compulsory**.

53. (அ) திருமதி. பிரமீளா தனது கணக்கேடுகளை ஒற்றைப் பதிவு முறையில் வைத்திருக்கிறார். கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டு 2003 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபாரக் கணக்கு, இலாப நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பும் தயார் செய்க. இயந்திரம் மீது தேய்மானம் ஆண்டிற்கு 10% விலக்கப்பட வேண்டும்.

ரொக்க ஏடு

| பெறுதல்கள் | தொகை ₹ | செலுத்தல்கள் | தொகை ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கோ | 16,000 | (ரொக்க) கொள்முதல் | 28,000 |
| (ரொக்க ) விற்பனை | 80,000 | பற்பல கடனீந்தோர் | 40,000 |
| பற்பல கடனாளிகள் | 60,000 | பொதுச் செலவுகள் | 12,000 |
| | | கூலி | 4,000 |
| | | எடுப்புகள் | 16,000 |
| | | இருப்பு கி/கு | 56,000 |
| | 1,56,000 | | 1,56,000 |

**பிறதகவல்கள் :**

| | 31.3.2002 ₹ | 31.3.2003 ₹ |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 18,000 | – |
| பற்பல கடனீந்தோர் | 28,800 | – |
| சரக்கிருப்பு | 20,000 | 32,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |
| அறைகலன் | 6,000 | 6,000 |

**கூடுதல் தகவல்கள் :**

| | |
|---|---|
| அளித்த தள்ளுபடி | 2,800 |
| பெற்ற தள்ளுபடி | 3,400 |
| கடன் விற்பனை | 68,800 |
| கடன் கொள்முதல் | 28,200 |

**அல்லது**

(ஆ) பிரசன்னா, நிர்மலா என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்களுடைய 2004 டிசம்பர் 31ஆம் நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | | ₹ | சொத்துகள் | | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் : | | | நிலம், கட்டடம் | | 80,000 |
| பிரசன்னா | 60,000 | | பொறி, பொறித்தொகுதி | | 20,000 |
| நிர்மலா | 50,000 | 1,10,000 | முதலீடுகள் | | 40,000 |
| காப்பு நிதி | | 20,000 | சரக்கிருப்பு | | 22,000 |
| பற்பல கடனீந்தோர் | | 32,000 | பற்பல கடனாளிகள் | 10,000 | |
| செலுத்தற்குரிய | | | கழிக்க : ஐயக்கடன் | | |
| மாற்றுச்சீட்டுகள் | | 13,600 | ஒதுக்கு | 400 | 9,600 |
| | | | ரொக்கம் | | 4,000 |
| | | 1,75,600 | | | 1,75,600 |

2005 ஜனவரி 1 -ஆம் நாள் பரிமளா என்பவரை கீழ்க்காணும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்தனர்.

(அ) பரிமளா ₹ 40,000 $\frac{1}{3}$ கூட்டுக்கு முதல் கொண்டு வருவது.

(ஆ) நிறுவனத்தின் நற்பெயரை ₹ 72,000 என மதிப்பிடுவது.

(இ) நிலம் ₹ 90,000 எனவும் முதலீடுகள் ₹ 50,000 எனவும் மதிப்பிடப்பட்டது.

(ஈ) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 4,000 குறைக்கப்பட்டது.

(உ) ஐயக்கடன் ஒதுக்கு ₹ 600 ஆக அதிகரிக்கப்பட்டது.

(ஊ) கடனீந்தோரில் ₹ 1,000 போக்கெழுதுவது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகளின் முதல் கணக்குகள், வங்கி கணக்கு மற்றும், மாற்றியமைக்கப்பட்ட கூட்டாண்மையின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயார் செய்க.

(a) Mrs. Pramila maintained her account books on single entry system. From the following information available in her records, prepare trading, profit and loss account for the year ending 31.3.2003 and a balance sheet as on that date, depreciating machinery at 10% per annum.

Cash Book

| Receipts | ₹ | Payment | ₹ |
|---|---|---|---|
| To Balance b/d | 16,000 | By (Cash) Purchases | 28,000 |
| To (Cash) Sales | 80,000 | By Sundry Creditors | 40,000 |
| To Sundry Debtors | 60,000 | By General Expenses | 12,000 |
| | | By Wages | 4,000 |
| | | By Drawings | 16,000 |
| | | By Balance c/d | 56,000 |
| | 1,56,000 | | 1,56,000 |

**Other Information :**

| | 31.3.2002 | 31.3.2003 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| Sundry Debtors | 18,000 | -- |
| Sundry Creditors | 28,800 | -- |
| Stock | 20,000 | 32,000 |
| Machinery | 80,000 | 80,000 |
| Furniture | 6,000 | 6,000 |

**Additional Information :**

| | |
|---|---|
| Discount allowed | 2,800 |
| Discount received | 3,400 |
| Credit sales | 68,800 |
| Credit purchases | 28,200 |

**OR**

(b) Prasanna and Nirmala were partners sharing profit and loss in the ratio of 3 : 2. Their balance sheet as on 31st December, 2004 is as under.

| Liabilities | | ₹ | Assets | | ₹ |
|---|---|---|---|---|---|
| Capital : | | | Land and Buildings | | 80,000 |
| Prasanna : | 60,000 | | Plant and Machinery | | 20,000 |
| Nirmala : | 50,000 | 1,10,000 | Investments | | 40,000 |
| Reserve fund | | 20,000 | Stock | | 22,000 |
| Sundry creditors | | 32,000 | Sundry debtors | 10,000 | |
| Bills payable | | 13,600 | Less : Provision for doubtful debts | 400 | 9,600 |
| | | | Cash | | 4,000 |
| | | 1,75,600 | | | 1,75,600 |

They decided to admit Parimala into the partnership with effect from 1st January, 2005 on the following terms.

(a) Parimala shall bring in a capital of ₹ 40,000 for $1/3^{rd}$ share of profits.

(b) Goodwill of the firm was valued at ₹ 72,000.

(c) Land was to be revalued at ₹ 90,000 and investments ₹ 50,000.

(d) Stock was to be written down by ₹ 4,000.

(e) Provision for doubtful debts was to be increased to ₹ 600.

(f) Creditors includes ₹ 1,000 no longer payable and this sum was to be written off.

Show revaluation account, capital accounts of partners and the balance sheet of the reconstituted partnership.

54. கீழே தரப்பட்டிருக்கும் திருமதி. ப்ரியா அவர்களின் 2015 மார்ச் 31 அன்றைய இருப்பாய்விலிருந்து வியாபார இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்க.

**இருப்பாய்வு**

| பற்று இருப்புகள் | ₹ | வரவு இருப்புகள் | ₹ |
|---|---|---|---|
| கொள்முதல் | 2,00,000 | முதல் | 3,00,000 |
| சம்பளம் | 10,000 | விற்பனை | 2,50,000 |
| வாடகை | 7,500 | பற்பல கடனீந்தோர் | 1,05,000 |
| காப்பீட்டு முனைமம் | 1,500 | | |
| எடுப்புகள் | 50,000 | | |
| இயந்திரம் | 1,40,000 | | |
| வங்கியில் ரொக்கம் | 22,500 | | |
| கணிப்பொறி | 1,25,000 | | |
| அறைகலன் | 50,000 | | |
| ரொக்கம் | 10,000 | | |
| தொடக்கச் சரக்கிருப்பு | 26,000 | | |
| பற்பல கடனாளிகள் | 12,500 | | |
| | 6,55,000 | | 6,55,000 |

**சரிக்கட்டுதல்கள் :**

1. 31.3.2015 அன்று இறுதி சரக்கிருப்பு ₹ 39,000
2. கொடுபடவேண்டிய வாடகை ₹ 1,000
3. முதல் மீது வட்டி 10% அனுமதிக்க
4. எடுப்பு மீது வட்டி 8% அனுமதிக்க
5. அறைகலன் மீது தேய்மானம் 5% நீக்குக

From the following Trial Balance of Tmt Priya as on 31st March 2015, prepare Trading and Profit and Loss account and Balance sheet.

**Trial Balance**

| Debit Balances | ₹ | Credit Balances | ₹ |
|---|---|---|---|
| Purchases | 2,00,000 | Capital | 3,00,000 |
| Salaries | 10,000 | Sales | 2,50,000 |
| Rent | 7,500 | Sundry Creditors | 1,05,000 |
| Insurance Premium | 1,500 | | |
| Drawings | 50,000 | | |
| Machinery | 1,40,000 | | |
| Cash at Bank | 22,500 | | |
| Computers | 1,25,000 | | |
| Furniture | 50,000 | | |
| Cash | 10,000 | | |
| Opening Stock | 26,000 | | |
| Sundry Debtors | 12,500 | | |
| | 6,55,000 | | 6,55,000 |

**Adjustments :**

1. Closing stock as on 31.3.2015 ₹ 39,000
2. Rent outstanding ₹ 1,000
3. Provide Interest on capital @ 10% and
4. Provide Interest on Drawings @ 8%.
5. Depreciation on Furniture 5% to be written off.

55. பேஷன் வேல்ர்ட் லிமிட்டெட்டின் வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கிலிருந்து இலாபத்தன்மை விகிதங்களைக் கணக்கிடுக.

2004 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு.

ப வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 20,000 | விற்பனை | 1,60,000 |
| கொள்முதல் | 1,20,000 | இறுதி சரக்கிருப்பு | 32,000 |
| கூலி | 12,000 | | |
| மொத்த லாபம் கீ/இ | 40,000 | | |
| | 1,92,000 | | 1,92,000 |
| நிர்வாகச் செலவுகள் | 8,000 | மொத்த இலாபம் கீ/கொ | 40,000 |
| விற்பனைச் செலவுகள் | 8,000 | பங்காதாயம் | 400 |
| நிதி சார் செலவுகள் | 4,000 | | |
| அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம் | 4,400 | | |
| நிகர இலாபம் | 16,000 | | |
| | 40,400 | | 40,400 |

From the Trading and Profit & Loss A/c of Fashion World Ltd. ascertain the profitability ratios.

**Trading and Profit & Loss A/c for the year ending 31.03.04**

Dr Cr

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| To Opening Stock | 20,000 | By Sales | 1,60,000 |
| To Purchases | 1,20,000 | By Closing Stock | 32,000 |
| To Wages | 12,000 | | |
| To Gross Profit c/d | 40,000 | | |
| | 1,92,000 | | 1,92,000 |
| To Administration expenses | 8,000 | By Gross Profit b/d | 40,000 |
| To Selling expenses | 8,000 | By Dividend | 400 |
| To Finance expenses | 4,000 | | |
| To Loss on sale of Furniture | 4,400 | | |
| To Net Profit | 16,000 | | |
| | 40,400 | | 40,400 |

56. பின்வரும் விவரங்களிலிருந்து 2005 மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.

| மாதம் | கடன் கொள்முதல் ₹ | கடன் விற்பனை ₹ | நிர்வாக மற்றும் விற்பனை செலவுகள் ₹ |
|---|---|---|---|
| ஜனவரி | 75,000 | 1,50,000 | 1,20,000 |
| பிப்ரவரி | 1,00,000 | 1,35,000 | 1,35,000 |
| மார்ச் | 85,000 | 1,75,000 | 65,000 |
| ஏப்ரல் | 1,25,000 | 1,20,000 | 70,000 |
| மே | 90,000 | 1,40,000 | 80,000 |

1. 1.3.2005 -ல் எதிர்நோக்கும் ரொக்க இருப்பு ₹ 80,000
2. சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்
3. வாடிக்கையாளர்களுக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்
4. செலவுகள் அம்மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும்
5. ஏப்ரலில் ₹ 25,000 நிலைச் சொத்து விற்கப்பட உள்ளது
6. மே மாதம் வாங்கப்பட வேண்டிய நிலைச் சொத்து ₹ 25,000

Prepare a cash budget for the month of March, April and May 2005 from the following information.

| Month | Credit Purchases ₹ | Credit Sales ₹ | Administration and Selling Expenses ₹ |
|---|---|---|---|
| January | 75,000 | 1,50,000 | 1,20,000 |
| February | 1,00,000 | 1,35,000 | 1,35,000 |
| March | 85,000 | 1,75,000 | 65,000 |
| April | 1,25,000 | 1,20,000 | 70,000 |
| May | 90,000 | 1,40,000 | 80,000 |

1. Expected cash balance on 1.3.2005 is ₹ 80,000.
2. Suppliers allowed a credit period of two months.
3. A credit period of one month is allowed to customers.
4. Expenses are paid in the same month.
5. Sale of fixed asset ₹ 25,000 in April.
6. Purchase of fixed asset in May ₹ 25,000.

57. ஜாக்சன் வரையறு நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல் ₹ 3,00,000 பங்கொன்று ₹ 10 வீதம் பிரிக்கப்பட்டுள்ளது. அது ₹ 10 மதிப்புடைய 6,000 பங்குகளை ₹ 2 முனைமத்தில் பின்வரும் நிபந்தனைகளோடு வெளியிட்டது.

விண்ணப்பத்தின் போது பங்கொன்றுக்கு ₹ 2 வீதம்

ஒதுக்கீட்டின் போது பங்கொன்றுக்கு ₹ 5 வீதம்

( ₹ 2 முனைமத்துடன் சேர்த்து)

முதலாவது அழைப்பின் போது பங்கொன்றுக்கு ₹ 3

இறுதி அழைப்பின்போது பங்கொன்றுக்கு ₹ 2

6,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பங்குகள் மீது பெறவேண்டிய அனைத்துத் தொகையும் முறையாக பெறப்பட்டது.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து வங்கி கணக்கு, பங்குமுதல் கணக்கு, பத்திர முனைம கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க.

Jackson Ltd. had an authorised capital of ₹ 3,00,000 divided into shares of ₹ 10 each. It offered 6,000 shares @ ₹ 10 each at premium of ₹ 2 on the following terms.

₹ 2 per share on application,

₹ 5 per share on allotment, (including ₹ 2 premium)

₹ 3 per share on first call and

₹ 2 per share on final call.

Applications were received for 6,000 shares. All the money due on shares were duly received . Pass Journal Entries, Prepare Bank Account, Share Capital Account, Securities premium Account and Balance Sheet.

-o0o-